**O.S.No.86/2014**

**Date:29.11.2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - அருணாச்சலம் செட்டியார், த-பெ.கண்ணப்பச் செட்டியார்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. அவர்களின் தகப்பனார் மற்றும் தாயாரை தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து வாதிகளுக்கு பூர்வீகப் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பூர்வீகப் பாத்தியப்பட்டு, வாதிகளின் தாத்தா இந்த சொத்தை 04.12.1951ம் தேதியில் நாராயண நாயர் என்பவருக்கு வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு தவறு என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. வாதிகளின் தாத்தா இந்த சொத்தை 04.12.1951ம் தேதியில் நாராயண நாயர் என்பவருக்கு வாடகைக்கு விட்டிருந்தார் என்றாலும், அவர்தான் 1964 வரை வாடகைதாரராக இருந்தார் என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்துக்கு வரி விதிப்பும் 1943 முதல் 1967 வரை வாதிகளின் மூதாதையர் பெயரில்தான் இருந்தது என்றால் சரியல்ல. 1957 முதல் யார் பெயரில் வரி விதிப்பு இருந்தது என்றால் என் தகப்பனார் பெயரில் இருந்தது. 1957க்கு முன்பாக யார் பெயரில் வரிவிதிப்பு இருந்தது என்றால் தெரியாது. 1964ம் வருடம் என் தகப்பனாருக்கு தாவாச் சொத்து வாதிகளின் தகப்பனார் வேலு அவர்களால் வாடகைக்குதான் விடப்பட்டிருந்தது என்றால் இல்லை. வாதிகள் இள வயதினராக இருந்ததை பயன்படுத்தி, அவர்கள் மைனர்களாக இருக்கும் போது, அவர் தகப்பனார் குடும்பத்தைவிட்டு பிரிந்து முறையற்ற வாழ்க்கையை ஒழுக்கமில்லாமல் வாழ்ந்துவந்தார் என்றால் சரியல்ல. 1958ல் இறந்து விட்டார் அதைப் பயன்படுத்தி, என் தகப்பனார் சில ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து வாதிகளின் தந்தை அனுபவத்தில் இருந்து, 1991ம் வருடம் 2ம் பிரதிவாதிக்கு லாரி செட் வைத்துக் கொள்ள வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து ரெக்கையா பீவிக்கு 21.05.1957 பாகப்பிரிவினைப் பத்திரப்படி பாத்தியமாகியிருந்ததாக வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 21.05.1957ல் பாகப்பிரிவினையில் ரெக்கையாபீவிக்கு கிடைத்ததாகச் சொல்வது அதிலிருந்து மூன்று மாதத்திற்குள்ளாக அதாவது 21.08.1957ல் கருப்பாயி அம்மாள் என்பவருக்கு ஈடு வைத்திருந்ததாகச் சொல்வதும் அதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அதாவது 08.10.1957ல் என் தகப்பனார் கிரையம் வாங்கியதாகச் சொல்வதும், மேற்படி மூன்று ஆவணங்களும் என் தகப்பனார் பொய்யாக ஒரு ஐந்துமாத காலத்திற்குள்ளாக உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. மாத வாடகை கேட்டு, வாதிகள் 2ம் பிரதிவாதிக்கு நோட்டீசு அனுப்பிய பின்னர், நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து, பொய்யாக வாடகை பத்திரங்களை உற்பததி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து

வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டுள்ளது என்றாலும்,எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்றாலும் சரியல்ல.